தேச பக்தி
DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:177 ★28.10.2026 ★தமிழ்நாளிதழ் ★புதன்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:177 ★28.10.2026 ★TamilDaily ★Wednesday ★Page-4 ★Price-₹5/- Chennai

31 ஆண்டுகளுக்கு பின் தமிழகத்தை உலுக்கிய சம்பவம்:

தேனியில் சிறை வார்டன்களை தாக்கி 17 கைதிகள் தப்பி ஓட்டம்

9 போலீசார் சஸ்பெண்ட்



தேனி மாவட்ட சிறையில் இருந்து நள்ளிரவு வார்டன்களை தாக்கிவிட்டு விசாரணை கைதிகள் 17 பேர் தப்பிச் சென்றனர். இவர்களில் 13 பேர் சிக்கியுள்ள நிலையில், மேலும் 4 பேரை தனிப்படையினர் தேடி வருகின்றனர். இந்த சம்பவம் தொடர்பாக 9 காவலர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டு உள்ளனர். தமிழகத்தில் தவெக ஆட்சி அமைந்த பிறகு கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம் உள்ளிட்ட குற்ற சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதனால் தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்கேடு நடந்துள்ளதாக கூறி, தவெக அரசுக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

புவியியல் காண்

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுள்ளது என்பதற்கு சான்றாக, 1995ல் வேலூர் சிறையில் இருந்து 48 பேர் தப்பிய சம்பவத்திற்கு பிறகு நேற்று முன்தினம் தேனி மாவட்டம் தேக்கம்பட்டி சிறையில் இருந்து வார்டன்களை தாக்கிவிட்டு, 17 கைதிகள் தப்பி ஓடியது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தாலுகா, கண்டமனூர் அருகே தேக்கம்பட்டி மலைப்பகுதியில் மாவட்ட சிறை அமைந்துள்ளது. இந்த சிறையில் விசாரணை கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். சிறையில் உள்ள 4 பிளாக்குகளில், 200 கைதிகள் வரைதான் அடைக்கும் வசதியுள்ளது. ஆனால், இச்சிறையில், 334 பேர் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இதில், 3 பேர் குண்டர் சட்டத்தில் கைதானவர்கள். ஒரு பிளாக்கில் 50 கைதிகளை அடைக்க வேண்டிய நிலையில், 3ம் பிளாக்கில் மட்டும் 92 கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

4வது பிளாக் 8வது அறையில் 17 விசாரணை கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர். வழக்கம் போல நேற்று முன்தினம் இரவு 6 சிறைக்காவலர்கள் பணியில் இருந்துள்ளனர். இரவு 10.30 மணியளவில் கைதி முத்து இளங்கோவனுக்கு வலிப்பு ஏற்பட்டதாக கூறி சக கைதிகள், கூச்சலிட்டுள்ளனர். இதையடுத்து, சிறைக்காவலர் ஸ்டாலின் பிரபு மற்றும் முதன்மைத் தலைமை வார்டன் மதன் மோகன் ஆகியோர், அந்த பிளாக்கிற்கு சிறை கதவை திறந்து உள்ளே சென்றுள்ளனர். அப்போது கைதிகள் சிலர் போர்வை மூலம் வார்டன்களின் முகத்தை மூடி சரமாரியாக தாக்கியுள்ளனர். பின்னர் இருவரையும் சிறைக்குள் தள்ளி கதவை பூட்டியுள்ளனர். பின்னர் அங்கிருந்த 17 கைதிகள் பிரதான நுழைவாயிலை நோக்கி ஓடினர்.

அங்கு பணியில் இருந்த சிறைக்காவலர் தங்கப்பாண்டி அவர்களை தடுத்துள்ளார். அப்போது சமையலறையில் இருந்து எடுத்து வந்த கரண்டியால் கைதி பொன்முத்துச்செல்வம், தங்கப்பாண்டியின் தலையில் தாக்கியுள்ளார். இதில் அவர் பலத்த காயமடைந்தார். பின்னர் பிரதான கேட்டை திறந்து, 17 பேரும் தப்பி ஓடினர்.

இதுகுறித்த தகவல் உடனடியாக சிறைத்துறை மற்றும் காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து தேனி எஸ்பி பிரவின் கவுதம் அங்கு வந்து விசாரித்தார். தொடர்ந்து, தென்மண்டல ஐஜி விஜயேந்திர பிதாரி, தென் மண்டல சிறைத்துறை துணைத் தலைவர் முருகேசன் ஆகியோர் சிறைக்கு வந்து விசாரித்தனர். மேலும், 17 தனிப்படைகள் அமைத்து தப்பியோடிய கைதிகளை பிடிக்க தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர். தமிழகம் முழுவதும் வாகன சோதனை, பஸ் நிலையம், ரயில் நிலையம் என பல இடங்களில் சோதனை தீவிரப்படுத்தப்பட்டது. தேனி அருகில் கேரள எல்லையில் உள்ளதால், அங்கு அலர்ட் செய்யப்பட்டது.

புவியியல் காண்

இந்நிலையில், சிறையை சுற்றிய பகுதியில் பதுங்கி இருந்த கைதிகளான பிரவீன்குமார், சிலம்பரசன், ராஜகுமார் மற்றும் ராஜா சிக்கந்தர் ஆகியோரை மடக்கிப்பிடித்து மீண்டும் சிறையில் அடைத்தனர். தப்பியோடிய மற்றவர்கள் மலைப்பகுதியில் பதுங்கி இருக்கலாம் என்பதால் மலைப்பகுதி முழுவதும் தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர். சிறையில் இருந்து சுமார் 4 கிமீ சுற்றளவிற்கு அதிநவீன டிரோன் கேமராக்கள் மூலம் தேடுதல் வேட்டையை தீவிரப்படுத்தினர். இதோடு தேனி மாவட்டத்திலுள்ள

அனைத்து சாலைகள், செக் போஸ்ட்கள், கேரள மாநிலத்திற்கு செல்லும் சாலைகள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் தீவிர தேடுதல் மற்றும் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

நேற்று காலையில், சிறைத்துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர், ஐஜி கனகராஜ், டிஐஜி அபிநவ் குமார், மதுரை சிறைத்துறை எஸ்பி கிருஷ்ணராஜ் ஆகியோர் தேக்கம்பட்டி சிறையில் வந்து ஆய்வு செய்தனர். பின்னர் சிக்கிய 4 கைதிகளிடமும் தீவிர விசாரணை நடத்தினர். இதையடுத்து, கைதிகள் தப்பிச்சென்ற சம்பவத்தில் சிறையில் பணியில் இருந்த தலைமைக் காவலர்கள் மதன்மோகன் மற்றும் ஸ்டாலின்பிரபு, முதல்நிலைக் காவலர் தங்கப்பாண்டி, மற்றும் இரண்டாம் நிலைக் காவலர்கள் ரமேஷ், விக்னேஷ், சஞ்சீவ் காந்தி, வேலுச்சாமி, ஜெயசீலன், கணபதி ஆகிய 9 பேரை சஸ்பெண்ட் செய்து சிறைத்துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவிட்டார்.

தொடர்ந்து, தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர் மாவட்டங்களிலும் தீவிர தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. தேனி மாவட்டம் முழுவதும் சுமார் 30க்கும் மேற்பட்ட இடங்களில் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டு, அரசு, தனியார் பேருந்துகள், லாரிகள், கார்கள் உள்ளிட்ட வாகனங்கள் அனைத்தும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. தொடர் சோதனையில் சிறையில் இருந்து தேனி செல்லும் வழியில், முத்துக்காளை ஓட்டிச்சென்ற ஆட்டோவை, தேனி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பின்புற மருந்து குடோன் அருகே நேற்று மதியம் ஏட்டு தடுத்து நிறுத்தி சோதனையிட்டார்.

அப்போது ஆட்டோவிற்குள், சிறையில் இருந்து தப்பிய மாற்றுத்திறனாளி கைதி லிங்கபிரசாத் இருந்தார். இதையடுத்து அவரை மீண்டும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

சிறையில் இருந்து தப்பிய லிங்க பிரசாத் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று மதியம் வரை சிறைச்சாலை பகுதியிலேயே சுற்றி வந்துள்ளார். பின்னர் சிறைச்சாலை அருகே உள்ள அரசு பாலிடெக்னிக் கல்லூரி முன் உள்ள பஸ் நிறுத்தம் அருகே ஆட்டோவில் ஏறியுள்ளார். குற்றவாளிகளை மாவட்டத்தின் பல பகுதிகளில் தேடுவதாக போலீசார் கூறிய நிலையில், நேற்று மதியம் வரை சிறைச்சாலை பகுதியிலேயே தப்பிய கைதிகளில் ஒருவர் சுற்றி வந்துள்ளது போலீசாரின் தேடுதல் வேட்டையை கேள்விக்குறியாக்கி உள்ளது.

5 கைதிகள் சிக்கிய நிலையில், சிறைச்சாலையின் பின்புறம் அம்மச்சியாபுரம் மலைப்பகுதியில் நவீன ட்ரோன் கேமராக்கள் மூலம் தேடுதல் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டது.

இதில் கைதிகளான கருப்பசாமி, தருண்குமார், பாண்டிச்செல்வம், சபரிநாதன், நிஷாந்த், முத்து இளங்கோ, கார்த்திக் ராஜா, சோலைமுகிலீஸ்வரன் ஆகிய 8 பேர், மலையில் உள்ள ஒற்றையடிப்பாதை வழியாக நடந்து சென்றனர். இதனை ட்ரோன் மூலம் கண்டறிந்த எஸ்பி தனிப்படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று 8 பேரையும் கைது செய்தனர். இதையடுத்து இச்சம்பவத்தில் 13 பேர் கைதாகியுள்ளனர். இந்த மலைப்பகுதியில்தான் மீதமுள்ள 4 பேர் பதுங்கியிருக்கலாம் என்ற அடிப்படையில் தனிப்படையினர் தீவிரமாக தேடி வருகின்றனர். தமிழகத்தில் நள்ளிரவு கைதிகள் தப்பி ஓடிய சம்பவம், தவெக அரசில் சட்டம், ஒழுங்கு சீர்கேட்டை வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது.17 கைதிகள் தப்பியதையடுத்து, தமிழகம் முழுவதும் உள்ள சிறைகளில் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

4 பேரை தேடுகிறோம்–டிஜிபி

தேக்கம்பட்டி சிறையை ஆய்வு செய்த சிறைத்துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர், நிருபர்களிடம் கூறுகையில், “இதுவரை 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், 4 பேரை தேடி வருகிறோம். நேற்றிரவு (நேற்று முன்தினம்) முதல் இன்று (நேற்று) மாலை வரை போலீசார் தீவிர தேடுதல் பணியில் ஈடுபட்டு பிடித்துள்ளனர்” என்றார்.

கைதிகள் படங்களை ஜாதியுடன் வெளியிட்ட போலீஸ்

காவல்துறை சார்பில் குற்ற சம்பவங்களில் ஈடுபட்டவர்களின் புகைப்படங்களை போலீசார் வெளியிடும்போது, அதில் குற்றவாளிகளின் பெயர், தந்தை பெயர், முகவரி, வயது உள்ளிட்ட விபரங்களே இடம் பெற்றிருக்கும். ஆனால், போலீசார் நேற்று வெளியிட்ட கைதிகளின் படங்களில் ஜாதி, மதத்தின் பெயர்களை குறிப்பிட்டிருந்தனர். இது தேவையற்ற ஜாதி, மத மோதல்களை உருவாக்கும் விதத்தில் இருந்ததாக சமூக ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

சிறையில் பாதுகாப்பு குறைபாடு – அமைச்சர் நிர்மல்குமார்

சிறைத்துறை அமைச்சர் நிர்மல்குமார் கோவையில் நேற்று நிருபர்களிடம் கூறுகையில், “முதலமைச்சர், சிறைத்துறை உள்பட அனைத்து துறைகளிலும் ஆய்வு மேற்கொண்டு வருகிறார். துறைகளின் செயல்பாடுகள் குறித்து நேரடியாக ஆய்வு செய்கிறார். தேனி சிறையில் இருந்து 17 கைதிகள் தப்பியது தொடர்பாக முழுவீச்சில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணமான 9 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். சிறைத்துறை டிஜிபி ஆய்வு மேற்கொண்டுள்ளார். சிறை பாதுகாப்பில் எங்கெங்கு குறைபாடு உள்ளது என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற பாதுகாப்பு குறைபாடுகள் இனிமேல் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். சிறைத்துறையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் முறைப்படுத்தப்படும்” என்றார்.

பல்வேறு பிரிவுகளில் வழக்குப்பதிவு 30 ஆண்டு வரை ஜெயில்தான்...!

சிறை கைதிகள் தப்பியது தொடர்பாக, கண்டமனூர் போலீசார், பிஎன்எஸ் சட்டத்தின் கீழ் பல்வேறு பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இதன்படி பணியில் இருக்கும் அரசு ஊழியரை தாக்குவது, கூட்டாக பிரச்னை உருவாக்குவது, ஆபத்து விளைவிக்கும் ஆயுதங்கள் பயன்படுத்தி தாக்குதல் நடத்துவது, அவதூறான வார்த்தைகளை ஒருவருக்கு எதிராக பயன்படுத்துவது, வழிப்பறி செய்தல், இரு தரப்பினரிடையே மோதலை தூண்டுதல், கொலை முயற்சி, சட்டப்பூர்வமாக பாதுகாக்கப்படும் சிறை உள்ளிட்ட இடங்களில் இருந்து அத்துமீறி வெளியேறுவது போன்ற சட்டப்பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டுகள் உறுதி செய்யப்பட்டு, அனைத்து பிரிவுகளிலும் நீதிமன்றம் தண்டனை விதித்து, அவற்றுக்கு தனித்தனியாக சிறையில் இருக்க வேண்டும் என உத்தரவிடலாம். அப்படி நடந்தால் இவர்கள் அனைவரும் சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேல் சிறை தண்டனை அனுபவிக்க நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

‘நான் உங்க கூட வரலைப்பா...’

கடைசியில் கைதி மனமாற்றம் சிறையில் இருந்து 18 பேர் வெளியே வந்துள்ளனர். கைதிகள் காவலர்களை தாக்கியதை கண்டு பயந்த ஒரு கைதி, எங்கே வாழ்நாள் முழுவதும் சிறையிலேயே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும் என்று அஞ்சி, ‘நான் வரவில்லை.. நீங்க தப்பிச்சு போங்கப்பா...’ என கூறிவிட்டு மீண்டும் சிறைக்குள் ஓடி விட்டார்.

தப்பிச் செல்ல ஸ்கெட்ச் போட்ட 3 கைதிகள்

சிறையில் இருந்து தப்புவதற்காக கைதிகள் மீனாட்சி சுந்தரம், திருப்பதி மற்றும் கருப்பசாமி ஆகியோர் மூளையாக செயல்பட்டது தெரிய வந்துள்ளது. சிறையில் போதுமான அளவிற்கு காவலர்கள் பணியில் இல்லை. பாதுகாப்பிற்கு குறைவான நபர்கள் இருக்கும் போது தப்பிச் செல்வது சுலபம் என நினைத்துள்ளனர். சினிமாவில் வருவதைப் போல வாய்ப்பு கிடைக்கும் நேரத்தில் தப்பி விட வேண்டும் என்றும், தேவைப்பட்டால் அதற்கான வாய்ப்பை நாமே உருவாக்க வேண்டுமென்றும் திட்டம் தீட்டியுள்ளனர். இதன்படி, வலிப்பு நாடகத்தை அரங்கேற்றி தப்பியுள்ளனர்.

கைதிகளை சந்திக்க வழியின்றி குடும்பத்தினர் காத்திருப்பு

தேக்கம்பட்டி சிறையில் தேனி மாவட்டம் மட்டுமின்றி திண்டுக்கல், மதுரை, விழுப்புரம், விருதுநகர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த விசாரணை கைதிகளும் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களை பார்ப்பதற்காக நேற்று சிறைக்கு வந்த அவர்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் யாரும் கைதிகளை சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. தீவிர விசாரணை மற்றும் கடும் சோதனைகளுக்கு பிறகு ஓரிரு குடும்பத்தினரை மட்டும் அடுத்தடுத்து கைதிகளை பார்க்க அனுமதித்தனர். இதனால் சிறைக்கு வெளியே உறவினர்கள் கூட்டமாக காத்திருந்தனர்.

தப்பி ஓடிய கைதிகள் யார் யார்?

சிறையில் இருந்து தப்பிச்சென்ற கைதிகள் விவரம் வருமாறு:

1. கருப்பசாமி (எ) மதன், மதுரை, ஜெய்ஹிந்த்புரம்.
2. தருண்குமார், சுந்தரநடப்பு, சிவகங்கை மாவட்டம்.
3. ராஜ்குமார், சுந்தராஜபுரம், மதுரை.
4. பாண்டிசெல்வம், திருவாடானை, ராமநாதபுரம் மாவட்டம்.
5. திருப்பதி, காமராஜர்புரம், மதுரை.
6. பொன்முத்துச்செல்வம், மதுரை.
7. மீனாட்சிசுந்தரம், மேல அனுப்பானடி, மதுரை.
8. சபரிநாதன், தடகபாடி, சேலம் மாவட்டம்.
9. ரெஜின், தளவாய்புரம், கன்னியாகுமரி மாவட்டம்.
10. நிசாந்த், கீழக்குயில்குடி, மதுரை மாவட்டம்.
11. முத்து இளங்கோவன், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.
12. கார்த்திக்ராஜா, ஜெய்ஹிந்த்புரம், மதுரை.
13. பிரசாந்த் (எ) லிங்க பிரசாத், மேலமடை, மதுரை.
14. ராஜா சிக்கந்தர், மேலமடை, மதுரை.
15. சிலம்பரசன், தேவாரம், தேனி மாவட்டம்.
16. சோலைமுகிலீஸ்வரன், சிந்தாமணி, மதுரை.
17. பிரவீன்குமார், மதுரை.

சிக்கியது யார்...தப்பியது யார்...?

தேக்கம்பட்டி சிறையில் இருந்து தப்பிய 17 பேரில், கருப்பசாமி, தருண்குமார், ராஜ்குமார், பாண்டிச்செல்வம், சபரிநாதன், நிஷாந்த், முத்து இளங்கோ, கார்த்திக் ராஜா, பிரசாந்த், ராஜாசிக்கந்தர், சிலம்பரசன், சோலைமுகிலீஸ்வரன், பிரவீன் குமார் ஆகிய 13 பேர் பிடிபட்டுள்ளனர். தலைமறைவாக இருக்கும் மீனாட்சி சுந்தரம், முத்துச்செல்வம், ரெஜின், திருப்பதி ஆகியோரை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

தகவல் தெரிஞ்சா கால் பண்ணுங்க...

தேனி சிறையில் இருந்து தப்பியவர்கள் குறித்த விவரங்கள் மற்றும் புகைப்படங்களை கொண்டு தேனி, ஆண்டிப்பட்டி, கம்பம் பஸ் ஸ்டாண்ட்களுடன், மதுரையின் மாட்டுத்தாவணி, ஆரப்பாளையம், பெரியார் பஸ் ஸ்டாண்ட்கள் உள்ளிட்ட தென்மாவட்டங்களின் முக்கிய பஸ் ஸ்டாண்ட்களிலும், தப்பியவர்களின் போலீசார் தீவிர தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தகவல் தெரிந்தால் தேனி மாவட்ட தனிப் பிரிவு அலுவலகத்தின் 94981 01570 என்ற எண்ணிற்கும், தேனி மாவட்ட காவல்துறை கட்டுப்பாட்டு அறையின் 91761 04100 என்ற எண்ணுக்கும் தொடர்பு கொண்டு தகவல் அளிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காவல்துறை உயர் அதிகாரிகளுடன் தலைமை செயலாளர் ஆலோசனை

தமிழ்நாட்டில் கொலை, கொள்ளை, பாலியல் குற்றங்கள், சிறுமிகள் மாயம் உள்ளிட்ட பல்வேறு குற்றச் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில் 17 கைதிகள் தப்பியோடிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் சாய் குமார் தலைமையில், காவல்துறை மற்றும் சிறைத்துறை உயர் அதிகாரிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் உள்துறைச் செயலாளர், காவல்துறை இயக்குநர், சிறைத்துறை உயர் அதிகாரிகள் மற்றும் காவல்துறையின் முக்கிய அதிகாரிகள் பங்கேற்றனர். சிறையிலிருந்து ஒரே நேரத்தில் இத்தனை கைதிகள் எவ்வாறு தப்பினர், பாதுகாப்பு பணியில் என்னென்ன குறைபாடுகள் இருந்தன, எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட அம்சங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும், சிறைகளில் கைதிகளைக் கண்காணிக்கும் முறை, காவலர்களின் பணிப் பொறுப்புகள், அவசர சூழல்களில் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் பாதுகாப்பு விதிமுறைகள் முறையாக கடைபிடிக்கப்படுகின்றனவா என்பது குறித்தும் ஆய்வு செய்வதன் அவசியம் வலியுறுத்தப்பட்டதாகத் தெரிகிறது.

கஞ்சா சப்ளை செய்த போலீஸ்

தேக்கம்பட்டி சிறையில் தப்பி ஓடிய 17 பேர் கஞ்சா போதைக்கு அடிமையானவர்கள். இவர்களுக்கு சில போலீசாரே அவ்வப்போது கஞ்சா சப்ளை செய்தது தெரியவந்துள்ளது. கெடுபிடி காரணமாக வழங்க முடியாத சூழலில் கஞ்சா கிடைக்காமல் பரிதவித்துள்ளனர். இதில் சிலர் நீண்ட கால தண்டனை கைதிகள். சிறையிலேயே வாழ்க்கையை கழிக்க வேண்டியிருக்குமே என்றும் யோசித்து வந்துள்ளனர். இதையடுத்தே வலிப்பு நாடகத்தை அரங்கேற்றி தப்பியது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

‘என்கிட்டே பணம் இல்லை... பிரண்ட் ஜிபே பண்ணுவாப்ல...’ கைதி வந்த ஆட்டோவின் டிரைவர் பேட்டி

மாற்றுத்திறனாளி கைதி லிங்கபிரசாத் பிடிபட்டது குறித்து ஆட்டோ டிரைவர் முத்துக்காளை கூறும்போது, “சிறை அருகே அரசு பாலிடெக்னிக் கல்லூரி பஸ் நிறுத்தம் அருகே ஆட்டோவில் பெண் பயணி ஒருவருடன் வந்து கொண்டிருந்தேன். அப்போது ஒருவர், ஆட்டோவை நிறுத்தி தேனிக்கு செல்ல வேண்டும் என்றார். “என்னிடம் பணம் இல்லை... நண்பரிடம் கூறி ஜிபே செய்கிறேன்” என்று கூறினார். அவரிடம் கையில் பணம் இல்லை. மாற்றுத்திறனாளி எனக்கூறியதால், நான் ஆட்டோவில் ஏற்றிக் கொண்டேன். பின்னால் டூவீலரில் வந்த போலீஸ் ஏட்டு ஆட்டோவை நிறுத்தி, அவரை பிடித்த போது தான் அவர் சிறையில் இருந்து தப்பியவர் என்பதே எனக்கு தெரியவந்தது. இதன்பின்னர், பாதுகாப்பு காரணத்திற்காக அந்த பெண்ணை அங்கேயே இறக்கிவிட்டு, ஆட்டோவில் ஏட்டு மற்றும் கைதியை சிறைக்கு அழைத்து வந்தேன்” என்றார்.

போலீசை தாக்கி

2 ரவுடி எஸ்கேப்

சேலம் ஆட்டையாம்பட்டியை சேர்ந்தவர் கோபி (30). இவர் நேற்று காலை கண்டர்குல மாணிக்கம் பஸ் நிறுத்தம் அருகில் நடந்து வந்தபோது 3 பேர் கத்திமுனையில் மடக்கி 500 ரூபாயை பறித்துக்கொண்டு தப்பினர். புகாரின்படி ஆட்டையாம்பட்டி போலீசார் வழக்கு பதிந்து, பிரபல ரவுடிகளான முத்தனம்பாளையம் தேவராஜ்(38), பெரியாண்டிப்பட்டி சந்தோஷ்குமார்(32), பிரபு(37) ஆகியோரை கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்த நேற்று மாலை போலீஸ் ஜீப்பில் ஏற்றினர். திடீரென ஏ பிரிவு ரவுடிகளான சந்தோஷ்குமாரும், பிரபுவும் போலீசாரை தள்ளிவிட்டு தப்பி ஓடிவிட்டனர்.

1995ம் ஆண்டு வேலூர் கோட்டையில் சுரங்கம் தோண்டி தப்பிய 48 கைதிகள்: 31 ஆண்டுகளுக்கு பின்

மீண்டும் அதிர்ச்சி சம்பவம்

தேனி மாவட்ட சிறையில் இருந்து 17 கைதிகள் தப்பிய சம்பவம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. தமிழக சிறைகளில் இருந்து இதற்கு முன்பு கைதிகள் தப்பிய முக்கிய சம்பவங்கள் விவரம் வருமாறு:

தனக்கு எதிரானவர்களை கொலை செய்து புதைத்த தூக்கு தண்டனை கைதி ஆட்டோ சங்கர், சென்னை மத்திய சிறையில் இருந்து 1989 ஆகஸ்ட் 21ம் தேதி தப்பி ஓடினார். பின்னர் ஓடிசா மாநிலம் ரூர்கெலாவில் அவர் கைது செய்யப்பட்டார். இதையடுத்து சிறை நிர்வாகத்தின் பாதுகாப்பு குறைபாடுகளை நீக்குவதற்காக அமைக்கப்பட்ட நீதிபதி இஸ்மாயில் கமிஷன், மத்திய சிறையை சென்னைக்கு வெளியே மாற்ற பரிந்துரைத்தது.

1991ல் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைக்கு சில மாதங்களுக்கு பின்னர், வேலூர் மத்திய சிறை 6வது பிளாக்கில் இருந்த இலங்கையை சேர்ந்த 2 பேர் உள்பட 8 ஆயுள் தண்டனை கைதிகள் தப்பினர். சிறை அறையின் மேற்கூரை ஓடுகளை அகற்றி வெளியேறி, அங்கிருந்த பொருட்களால் ஏணி தயாரித்து அதன் வழியாக சுற்றுச்சுவரை தாண்டி தப்பினர். இதுதொடர்பாக பணி நீக்கம் செய்யப்பட்ட சிறை காவலர் தொடர்ந்த வழக்கில் 2007 அக்டோபர் 26ல் சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் சிறைக்காவலர்களின் கடும் அலட்சியமே காரணம் எனக்கூறி பணி நீக்கத்தை உறுதி செய்தது.

1995பிப்ரவரி 27ல் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகள் ஆதரவாளர்கள் 9 பேர், காவலர்களை தாக்கி, துணிகளால் கட்டிப்போட்டுவிட்டு, போர்வைகள், துணிகளால் தயாரித்த கயிறுகள், இரும்பி கம்பிகள் ஆகியவற்றை பயன்படுத்தி சிறைச்சுவரை தாண்டி தப்பினர்.

ராஜீவ்காந்தி படுகொலைக்குப்பின் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு இந்திய அரசு தடை விதித்தது. அதைத் தொடர்ந்து, உரிய பயண ஆவணங்கள் இல்லாதவர்கள், விடுதலை புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் மற்றும் அவர்களுக்கு உதவியதாகச் சந்தேகிக்கப்பட்டவர்கள் 48 பேர் கைது செய்யப்பட்டு வேலூர் கோட்டை வளாகத்தில் இருந்த திப்பு மஹால் சிறப்புத் தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்தனர். 1995 ஆகஸ்ட் 15ம் தேதி அதிகாலையில், நாடு முழுவதும் சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கான பாதுகாப்புப் பணிகளில் காவலர்கள் தீவிரமாக ஈடுபட்ட நேரம் பார்த்து, கைதிகள் தரைமட்டத்திலிருந்து சுமார் 10 அடி ஆழத்தில், 153 அடி நீளத்திற்கு (47 மீட்டர்) மிக நீளமாக தோண்டி வைத்திருந்த சுரங்கப்பாதை வழியாக தப்பினர்.

வழக்கமான சிறைச்சாலை போல் இல்லாமல், இது சிறப்பு முகாம் என்பதால், தங்களுக்குக் கிடைத்த குளியலறை குழாய்கள், சாப்பிடும் தட்டுகள் மற்றும் சில இரும்புப் பொருட்களைக் கொண்டே தற்காலிகக் கருவிகளைச் செய்து பல மாதங்களாக சுரங்கத்தைத் தோண்டி உள்ளனர். சுரங்கம் தோண்டும்போது கிடைத்த டன் கணக்கிலான மண்ணை, சிறை வளாகத்தில் உள்ள வடிகால்களில் தண்ணீரோடு அடித்துச் செல்ல வைத்தும், அங்குள்ள தோட்டத்தில் பரப்பியும் காவலர்களுக்குச் சந்தேகம் வராதவாறு மறைத்திருந்தனர். திப்பு மஹாலின் தென்மேற்கு மூலை அறையின் தரைக் கல்லைப் பெயர்த்து, அதன் வழியே கீழே இறங்கி சுரங்கப் பாதையை அமைத்தனர். இந்தச் சுரங்கம் நேராகக் கோட்டையின் வெளிப் பகுதியில் உள்ள அகழிக்கு அருகில் சென்று முடிந்தது. அகழியையும் தாண்டி அவர்கள் அனைவரும் தப்பினர். கோட்டைச் சிறையிலிருந்து தப்பிய 48 பேரும் திட்டமிட்டபடி பல்வேறு குழுக்களாகப் பிரிந்து, சிலர் ரயில் மூலமும் சிலர் பஸ்கள் மூலமும் வெவ்வேறு திசைகளில் தப்பிச் சென்றனர். இச்சம்பவம் தமிழ்நாடு காவல்துறை மற்றும் இந்திய நாடாளுமன்றம் வரை பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. உடனடியாக மாநிலம் தழுவிய தீவிரத் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

தப்பியோடிய 48 பேரில் 21 பேர் மட்டுமே மீண்டும் போலீசாரால் பிடிக்கப்பட்டனர். இதில் சென்னையில் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த போலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சந்தேகத்தின் பேரில் ஒருவரை பிடித்து விசாரிக்க முயன்றபோது அவர் கழுத்தில் கிடந்த சயனைடு குப்பியை கடித்து உயிரிழந்தார். இதுதொடர்பான விசாரணையின்போதுதான், வேலூர் கோட்டையில் இருந்து 48 பேர் தப்பிய விவகாரம் வெளிச்சத்துக்கு வந்தது. மீதமுள்ளவர்கள் கடல் வழியாக இலங்கைக்குத் தப்பிச் சென்றுவிட்டதாகக் கூறப்பட்டது. இந்தச் சம்பவம் நடந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு, தற்போது தேனி மாவட்டக் கிளைச் சிறையிலிருந்து 17 கைதிகள் தப்பியோடிய சம்பவம் பெரும் பரபரப்பையும், சிறையில் பாதுகாப்பின்மையும் வெளிக்காட்டியுள்ளது. இந்த சம்பவம் பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

30 பேருக்கு பதிலாக 6 பேர் மட்டுமே பணி

தேக்கம்பட்டி சிறையில் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக சிறை கைதிகள் அடைக்கப்பட்டுள்ள சிறையில், சராசரியாக சுமார் 30 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட வேண்டும் என்பது சிறைத்துறை விதி. ஆனால் நேற்று முன்தினம் இரவு, 6 பேர் மட்டுமே பணியில் இருந்துள்ளனர். போதிய பாதுகாப்பு இல்லாததால்தான் கைதிகள் சுலபமாக சிறையில் இருந்து தப்பியுள்ளனர். உரிய எண்ணிக்கையில் போலீசார் இருந்திருந்தால் தப்பிச் செல்வதை தடுத்திருக்கலாம்.

சிறைச்சாலையிலேயே வார்டனிடம் நகை பறிப்பு

சிறைக்கைதிகள் தப்பியபோது, முதன்மை தலைமை வார்டன் மதன் மோகன் அணிந்திருந்த ஒன்றரை பவுன் தங்க சங்கிலியையும் கைதிகளில் ஒருவர் பறித்துச் சென்றுள்ளார். கைதிகள் தாக்கியதில் காயமடைந்த சிறைக்காவலர்கள் தங்கப்பாண்டி, பால்பாண்டி ஆகியோர், தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவம

திருவண்ணாமலையில் எரியாத உயர் மின்விளக்குகள், மழைநீர் தேக்கம், போக்குவரத்து பாதுகாப்பு

உடனடி சீரமைப்புப் பணிகளுக்கு ஆட்சியர் வந்தனா கார்க் உத்தரவு

திருவண்ணாமலை மாநகராட்சியில் பொதுமக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் வகையில், எரியாத உயர் மின்விளக்குகள், மழைக்கால நீர்த்தேக்கம், சாலைப் பாதுகாப்பு மற்றும் புதிய பேருந்து நிலையம் – ரயில் நிலையம் இடையிலான இணைப்புப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் பல்வேறு இடங்களில் நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, நிலுவையில் உள்ள சீரமைப்புப் பணிகளை விரைந்து முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க், 27.10.2026 அன்று மாநகராட்சிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார்.

திண்டிவனம் சாலையில் ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர், அப்பகுதியில் எரியாமல் இருந்த உயர் மின் விளக்குகளைப் பார்வையிட்டார். அவற்றை உடனடியாகச் சீரமைத்து, பொதுமக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும் என சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, நெடுஞ்சாலைத்துறை சார்பில் திருவண்ணாமலை புதிய பேருந்து நிலையம் மற்றும் ரயில் நிலையத்தை இணைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை ஆய்வு செய்தார். பொதுமக்கள் எளிதாகச் சென்று வருவதற்காகத் தானியங்கி நகரும் படிக்கட்டு (எஸ்கலேட்டர்), மின்தூக்கி, நடைபாதை மற்றும் படிக்கட்டு வசதிகள் அமைக்கும் பணிகளைப் பார்வையிட்ட அவர், இப்பணிகளைத் தரமாகவும் விரைவாகவும் முடிக்க அறிவுறுத்தினார்.

மேலும், புதிய பேருந்து நிலையத்தின் சுற்றுச்சுவருக்கும் சாலைக்கும் இடையே விரிசல் ஏற்பட்டுள்ளதைப் பார்வையிட்ட ஆட்சியர், அதனை உடனடியாகச் சீரமைத்து, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என அலுவலர்களிடம் தெரிவித்தார்.

காந்திநகர் மைதானத்தில் ஆய்வு மேற்கொண்டபோது, அங்கு தேங்கியிருந்த மழைநீர் மற்றும் சேற்றை உடனடியாக அகற்றி, மைதானத்தைச் சீரமைக்க உத்தரவிட்டார். சன்னதி தெருவில் ஆய்வு செய்த அவர், தேவையான இடங்களில் தெருவிளக்குகள் அமைத்து, இரவு நேரங்களில் பொதுமக்கள் பாதுகாப்பாகச் சென்று வருவதற்கான வசதிகளை ஏற்படுத்துமாறு மாநகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

திருவண்ணாமலை நகரின் முக்கியப் பகுதிகளான தேரடி வீதி, ஆணைக்கட்டி தெரு, கடலைக்கடை மூலை உள்ளிட்ட இடங்களில் மழைக்காலங்களில் ஏற்படும் நீர்த்தேக்கப் பிரச்சினைகள் குறித்தும் ஆட்சியர் ஆய்வு செய்தார். மழைநீர் தேங்குவதற்கான காரணங்களைக் கண்டறிந்து, அதனைத் தடுப்பதற்கான உரிய தீர்வுகளைத் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும் என மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தினார்.



தொடர்ந்து, மணலூர்பேட்டை சாலையில் உள்ள அண்ணாமலையார் பூ மார்க்கெட்டுக்குச் செல்லும் சாலையில் பொது மக்கள் நெடுஞ்சாலையைக் கடக்கும் பகுதியைப் பார்வையிட்டார். அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகளைத் தவிர்க்கும் வகையில், பொதுமக்கள் பாதுகாப்பாகச் சாலையைக் கடக்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நெடுஞ்சாலைத்துறை அலுவலர்கள் மற்றும் காவல்துறையினருக்கு அறிவுறுத்தினார்.

மாநகராட்சிப் பகுதிகளில் பொதுமக்கள் அன்றாடம்எதிர்கொள்ளும் அடிப்படை வசதிக் குறைபாடுகளை நேரில் ஆய்வு செய்த ஆட்சியர், அவற்றுக்குத் தீர்வு காண சம்பந்தப்பட்ட துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும், மேற்கொள்ளப்படும் பணிகளின் தரம் மற்றும் முன்னேற்றத்தைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், மாநகராட்சி ஆணையர் பாலசுப்பிரமணியன், துணைக் காவல் கண்காணிப்பாளர் துரைகுமார், நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் லெனின், திருவண்ணாமலை வட்டாட்சியர் மோகன்ராமன் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



வேடந்தாங்கல் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஐப்பசி கிருத்திகையையொட்டி பக்தர்கள் கிரிவலம்

இராணிப்பேட்டை மாவட்டம், பாணாவரத்தை அடுத்த வேடந்தாங்கல் கிராமத்தில் அமைந்துள்ள வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமி கோவிலில், ஐப்பசி மாத கிருத்திகையை முன்னிட்டு நேற்று சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன.

இதையொட்டி, சுப்பிரமணிய சுவாமிக்கு பால், தயிர், பன்னீர், இளநீர், சந்தனம், மஞ்சள் உள்ளிட்ட பல்வேறு திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. தொடர்ந்து, பல வண்ண மலர்களால் சுவாமி அலங்கரிக்கப்பட்டு, மகா தீபாராதனை நடைபெற்றது. சிறப்பு அலங்காரத்தில் சுப்பிரமணிய சுவாமி பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதில், சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து, மாலையில் வள்ளி, தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமி உற்சவர் பல்லக்கில் எழுந்தருளி, மலையைச் சுற்றி கிரிவலம் வந்தார். அப்போது, ஏராளமான பக்தர்கள் முருகனின் பக்திப் பாடல்களைப் பாடியவாறு கிரிவலம் சென்று வழிபட்டனர். விழாவில் பங்கேற்ற பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

ஆற்காட்டில் இமைகள் அறக்கட்டளை மூலம் மரக்கன்றுகள் நடும் விழா





ஆற்காடு புதுப்பாடி மற்றும் லாடாவரம் பகுதியில் உள்ள அரசு மருத்துவமனையில் இமைகள் அறக்கட்டளை மற்றும் அரசு சுகாதாரம் மருத்துமனைகள் இனைந்து மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் இமைகள் அறக்கட்டளை தலைவர் சையத்பாருக் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார் மற்றும் வட்டார மருத்துவ அலுவலர் சுரேஷ் பாபு ராஜ் அவர்கள் முன்னிலை வகித்தார் மருத்துவமனை துணை மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் கலந்து கொண்டு சிறப்பாக நிகழ்ச்சியை நடத்தினர்

எல்லப்பட்டி கிராமத்தில் RAWE மாணவர்கள் பங்கேற்புடன் PRA நிகழ்ச்சி

காரைக்குடி சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளையின் (Sethu Bhaskara Agriculture College and Research Foundation) ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், அக்டோபர் 26, 2026 அன்று எல்லப்பட்டி கிராமத்தில் பங்கேற்பு ஊரக மதிப்பீடு (Participatory Rural Appraisal PRA) நிகழ்ச்சிக்கான களப்பணி மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் து. லோகேஸ்வரன், பூ. ராஜேஷ், சு. விஷ்வா, து. கௌதமன், ச. சேகுவாரா சமயன், கொ. அசோக்குமார் மற்றும் ஆ. ஸ்ரீராம் ஆகிய ஏழு RAWE மாணவர்கள் பங்கேற்றனர்.

கிராமத்தின் வேளாண் நிலை, இயற்கை வளங்கள், நீர்ப்பாசன வசதிகள், பயிர் சாகுபடி முறைகள் மற்றும் விவசாயிகள் எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சினைகள் குறித்து அறிந்து கொள்வதே இப்பணியின் முக்கிய நோக்கமாகும்.

மேலும், கிராம மக்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் அவர்களின் தேவைகள், கருத்துகள் மற்றும் வேளாண் வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் புரிந்துகொள்ளும் வகையில் PRA செயல்பாடுகள் திட்டமிடப்பட்டன. இக்களப்பணி மூலம் கிராமப்புற மக்களின் பங்கேற்புடன் வேளாண் பிரச்சினைகளைக் கண்டறிந்து, நிலையான வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கான தீர்வுகளை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை மாணவர்கள் அறிந்துகொள்ளும் வாய்ப்பு பெற்றனர்.





பழனி கோயிலுக்கு வந்த நபர் ஒருவர் மாரடைப்பு காரணமாக இறந்துவிட்டார். அவரை அணு ஆம்புலன்ஸ் மூலமாக காவல்துறை உதவியோடு மீட்டு. பழனி அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. அவருடைய குடும்பத்தாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது...

ஒரு மாதமாக பள்ளிக்குச் செல்லாததை பெற்றோர் கண்டித்ததால் விபரீதம்:

செங்கம் அருகே 2 சகோதரிகள் உட்பட 3 மாணவிகள் மாயம்

தனிப்படை அமைத்து காவல்துறை தீவிர தேடுதல்

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் அருகே தண்டராம்பட்டு கிராமத்தில் பள்ளி மாணவிகள் மூன்று பேர் திடீரென மாயமான சம்பவம் பெற்றோர் மற்றும் பொதுமக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதில் இரண்டு பேர் சகோதரிகள் ஆவர். பள்ளிக்குச் செல்லாமல் இருந்ததை பெற்றோர் தொலைபேசியில் கண்டித்ததால் மனமுடைந்த மாணவிகள் வீட்டிலிருந்து வெளியேறியதாகக் கூறப்படும் நிலையில், அவர்களைக் கண்டுபிடிக்க காவல்துறையினர் தனிப்படை அமைத்துத் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

தண்டராம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த அசோக்குமார் – ஜோதி தம்பதியின் மகள்கள் அ. மகாலட்சுமி (15), அ. மகேஸ்வரி (14). இவர்களது உறவினர்களான ராஜேந்திரன் – அனுசுயா தம்பதியின் மகள் ரா. நித்யா (13). இந்த மூன்று மாணவிகளும் தண்டராம்பட்டு பகுதியில் உள்ள அரசு பள்ளிகளில் படித்து வருகின்றனர்.

மகாலட்சுமி மற்றும் மகேஸ்வரி ஆகியோர் தண்டராம்பட்டு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முறையே 10 மற்றும் 9–ஆம் வகுப்புகளில் படித்து வருகின்றனர். நித்யா, அப்பகுதியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 8–ஆம் வகுப்பு படித்து வருகிறார்.

கேரளாவில் கூலித் தொழில் செய்யும் பெற்றோர்

அசோக்குமார், ஜோதி, ராஜேந்திரன், அனுசுயா ஆகிய நால்வரும் கூலித் தொழிலாளர்கள். இவர்கள் கேரள மாநிலத்தில் விவசாயக் கிணறுகள் தோண்டும் பணியில் ஈடுபட்டு வருவதால், பெரும்பாலான நாட்கள் அங்கேயே தங்கியிருந்து வேலை செய்து வருகின்றனர். திருவிழாக்கள் மற்றும் குடும்ப நிகழ்ச்சிகளின்போது மட்டும் சொந்த ஊருக்கு வந்து செல்வதாகக் கூறப்படுகிறது.

இதனால், தண்டராம்பட்டு கிராமத்தில் வாடகை வீட்டில் வசித்து வரும்பாட்டி உண்ணாமலை (65) பராமரிப்பில் மூன்று மாணவிகளும் இருந்து வந்தனர்.

பள்ளிக்குச் செல்லாததால் பெற்றோர் கண்டிப்பு

கடந்த ஒரு மாதமாக மூன்று மாணவிகளும் பள்ளிக்குச் செல்லாமல் இருந்ததாகக் கூறப்படுகிறது. இதையடுத்து, அவர்களது பெற்றோர் தொலைபேசி வாயிலாக மாணவிகளைக் கண்டித்துள்ளனர். இதனால் மனமுடைந்த மாணவிகள், திங்கள்கிழமை மாலை சுமார் 4 மணியளவில் பள்ளிச் சீருடையுடன் வீட்டிலிருந்து வெளியேறியதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

நீண்ட நேரமாகியும் மாணவிகள் வீடு திரும்பாததால், பாட்டி உண்ணாமலை அவர்களை உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தேடியுள்ளார். பல இடங்களில் தேடியும் மாணவிகள் குறித்த தகவல் கிடைக்காததால், அவர்களது பெற்றோருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

தனிப்படை அமைத்து தீவிர தேடுதல்

இதுகுறித்து மாணவிகளின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில், தண்டராம்பட்டு காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர். மாயமான மூன்று மாணவிகளையும் கண்டுபிடிப்பதற்காகத் தனிப்படைகள் அமைக்கப்பட்டு, பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாணவிகள் வீட்டை விட்டுவெளியேறியதற்கான காரணம், அவர்கள் சென்றிருக்கக்கூடிய இடங்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் குறித்து காவல்துறையினர் விசாரித்து வருகின்றனர். மூன்று மாணவிகளையும் விரைவாகக் கண்டுபிடிக்கும் நோக்கில் தேடுதல் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

குடும்பத்தினர் வேலைக்காக வெளிமாநிலத்தில் தங்கியிருக்கும் சூழலில், மாணவிகள் மூவரும் ஒரே நேரத்தில் மாயமான சம்பவம் அப்பகுதியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. மாணவிகள் பாதுகாப்பாக மீட்கப்படுவார்களா என்ற எதிர்பார்ப்பில் அவர்களது குடும்பத்தினரும் உறவினர்களும் காத்திருக்கின்றனர்.



பேசுவோம் வெல்வோம் மற்றும் சூப்பர் VJ/RJ போட்டிகளில் டிஜெஎஸ். பப்ளிக் (சிபிஎஸ்இ) பள்ளி மாணவர்கள் சாதனை

கும்மிடிப்பூண்டி அருகே பெருவாயலில் அமைந்துள்ள டிஜெஎஸ். பப்ளிக் (சிபிஎஸ்இ) பள்ளி மாணவர்கள் பரிசுகளை வென்று பள்ளிக்குப் பெருமை சேர்த்தனர்.

– யஷ்வந்த் எட்டாம் வகுப்பு:



மாணவர்கள், 7 News சேனல் நடத்திய பேச்சுப் போட்டிகளில் பங்கேற்று பரிசுகளை வென்று பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

நியூஸ் 7 நடத்திய "பேசுவோம் வெல்வோம்" பேச்சுப் போட்டியில், டிஜெஎஸ். பப்ளிக் (சிபிஎஸ்இ) பள்ளியின் எட்டாம் வகுப்பு மாணவர் யஷ்வந்த் முதல் பரிசு பெற்று சாதனை படைத்தார். இதனைத் தொடர்ந்து சூப்பர் VJ | RJ பேச்சுப் போட்டியில், பள்ளிகளுக்கு இடையேயான போட்டியில் டிஜெஎஸ். பப்ளிக் (சிபிஎஸ்இ) பள்ளியைச் சேர்ந்த 22 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். அவர்களில் மூன்று இரண்டாம் பரிசு, யாதர் ஷா ஏழாம் வகுப்பு: தமிழ்ப் பேச்சுப் போட்டியில் மூன்றாம் பரிசு, ஹாசினி ஆறாம் வகுப்பு: ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் இரண்டாம் பரிசு. மாணவர்களின் இந்தச் சாதனைக்குப் பள்ளி நிர்வாகமும் ஆசிரியர்களும் பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

டிஜெஎஸ். கல்விக் குழுமத் தலைவர் டிஜெ. கோவிந்தராஜன் வழிகாட்டுதலிலும், பள்ளித் தாளாளர் தமிழரசன் தொடர் ஊக்குவிப்பிலும், பள்ளி முதல்வர் டாக்டர் தனலட்சுமி ஒருங்கிணைப்பிலும், ஆசிரியர்களின் சிறப்பான பயிற்சியிலும் மாணவர்கள் இச்சாதனைகளைப் படைத்துள்ளனர்.

தேனி மாவட்டம் பழைய பஸ் நிலையம் அருகில்

ஆட்டோ தொழிலாளர்கள் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்

ஆட்டோ தொழிலாளர்கள் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் பல்வேறு பகுதிகளில் நடைபெற்றது அதன் ஒரு பகுதியாக தேனி மாவட்டம் பழைய பஸ் நிலையம் அருகில் ஆர்பாட்டம் நடை பெற்றது ஆர்பாட்டத்தி ன் போது தமிழக அரசே!.. ஒன்றிய அ ர சே ! ! . . ஆட்டோ மீட்டர் கட்டணத்தை உயர்த்து கோரிக்கைகளை வலியுறுத்தி ஆட்டோ தொழிலாளர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி CITU ஆட்டோ தொழிலா ளர்கள் சங்கதின் மாவட்டது னை தலைவர் ஜெகநாதன் தலைமையில் நடைபெற்றது. போராட்டத்தை சங்கதின் மாவட்ட செயலாளர் பாலகுருநாதன் துவக்கி வைத்து பேசினார்.கோரிக்கைகளை



வெற்றிப்பயண அறிவிப்பால் ஆட்டோ தொழிலாளர்கள் வாழ்வாதாரம் பாதிப்பு ஆட்டோ தொழிலா ளர்களுக்கு மானியம் வழங்குஆந்திர மாநிலத்தைப் போல் FC கட்டணம், இன்சூரன்ஸ் கட்டணம் தமிழக அரசே ஏற்றிடுமானிய விலையில் டீசல் வழங்கிடு நல வாரியம் மூலமாக தீபாவளி போனஸ் 5000/– வழங்கிடுஆன்லைன் அபராதத்தை ரத்து செய்திடுவிபத்தால் ஏற்படும் மரணத்திற்கு ரூ.5,00,000/– உதவி தொகை வழங்கிடு என பல்வேறு விளக்கி சங்கத்தின் மாவட்ட தலைவர் ஜெயபாண்டி.. மாவட்ட பொருளாளர் ராஜ்குமார் மாவட்ட குழு உறுப்பினர் லெனின் CITU மாவட்ட பொருளாளர் வெண்மணி மாவட்ட துனை செயலாளர் மோகன் பேசினார்கள். CITU மாவட்ட செயலாளர் சண்முகம் நிறைவு செய்து பேசினார்.. பின்னர் சங்கத்தின் மாவட்ட நிர்வாகி ரதூல் மைதீன் நன்றி கூறினார். ஆர்பாட்டத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



இந்த இரண்டு குதிரைகள் காலை காரமடை பேருந்து நிறுத்துமிடதில் இங்கும் அங்குமாக அலைந்து கொண்டு அங்கு நிற்கும் மாணவிகள் மாணவர்கள் வேலைக்கு போகும் பெண்கள் எல்லாருக்கும் மிக சிரமத்தை ஏற்படுத்தி கொண்டு இருக்கிறது.

இந்த நேரத்தில் காலை பள்ளி செல்லும் சிறுவர்கள் என அனைவருகும் ஓட்டுநர்களுக்கும், இரு சக்கர வாகனத்தில் வருவோர்க்கு சிரமத்தை ஏற்படுத்தி கொண்டு உள்ளது.

சம்பந்த பட்ட துறையினர் இதற்கு ஓர் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுக்களின் வேண்டுகோளாக இருக்கிறது.

கோட்டூர் கிராமத்தில் PRA மற்றும் பஞ்சகவ்யம் தயாரிப்பு செயல்விளக்கம்:

சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

தேனி மாவட்டம், கோட்டூர்: சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த வேளாண் மாணவிகள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWEP) கீழ், கோட்டூர் கிராமத்தில் பங்கேற்பு ஊரக மதிப்பீடு (PRA Participatory Rural Ap–praisal) மற்றும் பஞ்சகவ்யம் தயாரிக்கும் முறை குறித்த பி ர ச் சி னை க ளை ப் புரிந்துகொள்ளவும், கிராம வ ள ர் ச் சி க் க ான வாய்ப்புகளை ஆராயவும் PRA முறைகள் பயன்படுத்தப்பட்டன. கிராம மக்களின் பங்கேற்பு டன் தகவல்களைச் சேகரித்து, கிராமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான அம்சங்களை அறிந்து கொள்வதன் முக்கியத்துவம் குறித்தும் விளக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இயற்கை வேளாண்மையில் வி ள க் க ப் ப ட் ட து . விவசாயிகள் உள்ளூரில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி இயற்கை இடுபொருட்களைத் தயாரித்துப் பயன்படுத்து வதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியின் மூலம் கிராம மக்களிடையே பங்கேற்பு ஊரக மதிப்பீட்டின் முக்கியத்து வம், கிராம வளங்களை அடையாளம் காணுதல் மற்றும் இயற்கை



விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர் இந்நிகழ்ச்சியில் வேளாண் மாணவிகளான சே.வானதி, ச.லத்திகா, தி.ருத்ரதர்ஷினி, க.பிரியதர்ஷினி, கி.பூ. ஷர்மிளா, மு.ச.கவிபாரதி மற்றும் சு.தீபலட்சுமி ஆகிய ஏழு பேர் இணைந்து PRA நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன் ஒரு பகுதியாக, கிராமத்தின் முக்கிய வளங்கள், குடியிருப்புப் பகுதிகள், சாலைகள், நீர்நிலைகள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்ததகவல்கள் சேகரிக்கப்பட்டன. இதன் மூலம் கிராமத்தின் தற்போதைய நிலை மற்றும் வளங்கள் குறித்து அறிந்துகொள்ளப்பட்டது. மேலும், கிராமத்தின் வளங்களை அடையாளம் காணவும், விவசாயிகள் எ தி ர் கொ ள் ளு ம் முக்கியத்துவம் வாய்ந்த பஞ்சகவ்யம் தயாரிக்கும் முறை குறித்த செ ய ல் வி ள க் க ம் அ ளி க் க ப் ப ட் ட து . பஞ்சகவ்யம் தயாரிக்கத் தேவையான பொருட்கள், அவற்றைச் சரியான அளவில் கலந்து தயாரிக்கும் முறை மற்றும் நொதித்தல் செயல்முறை ஆகியவை குறித்து மாணவிகள் விளக்கினர். மேலும், பஞ்சகவ்யத்தின் பயன்பாடுகள் மற்றும் இயற்கை வேளாண்மையில் அதன் பங்கு குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

பஞ்சகவ்யம் போன்ற இயற்கை இடுபொருட்களைப்பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் வளத்தைப் பாதுகாத்து, பயிர்களின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் வேளாண்மை முறைகளைப் பின்பற்றுதல் குறித்த வி ழி ப் பு ண ர் வு ஏற்படுத்தப்பட்டது. இத்தகைய களப்பணிகள் மூலம் வேளாண் மாணவிகள் கிராம மக்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு, அவர்களின் தேவைகள், கிராமத்தின் வளங்கள் மற்றும் வேளாண் ந ட மு ற ை க ள ை அ றி ந் து கொ ள் ளு ம் வாய்ப்பைப் பெற்றனர்.

சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, கிராமப்புற வளர்ச்சி மற்றும் இயற்கை வேளாண்மை குறித்த வி ழி ப் பு ண ர் வை ஏற்படுத்தும் பயனுள்ள களப்பணியாக அமைந்தது.

பாடியநல்லூரில் வீரப்பேரரசு மாமன்னர் மருதுபாண்டியர்களின் 225வது நினைவு நாள் குருபூஜை

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி மொண்டியம்மன் நகர் பஜாரில் வீரப்பேரரசு



மாமன்னர் மருதுபாண்டி யர் பேரவை, இளைஞர் அணி பாடியநல்லூர் சுற்றுவட்டாரம் சார்பில் வீரப்பேரரசு மாமன்னர் மருதுபாண்டியர்களின் 225–வது நினைவு நாள் குருபூஜை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மருது பாண்டியர்களின் திருஉருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து இனிப்பு மற்றும் பழங்களை படையலிட்டு குத்து விளக்கு ஏற்றிவைத்து மலர்கள் தூவி தீபாரா தனை காண்பித்து மரியாதை செலுத்தினர். முன்னதாக செங்குன்றம் கூட்டுச்சாலையில் உள்ள நேதாஜி திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பின்னர் பேரணியாக நிகழ்ச்சி நடைபெற்ற இடத்திற்கு வந்தடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்க ளுக்கு அறுசுவை அன்னதா னத்தை வழங்கினர். இதில் வீரப்பேரரசு மாமன்னர் மருதுபாண்டி யர் பேரவை, இளைஞர் அணி மற்றும் பாடியந ல்லூர் சுற்றுவட்டார கள்ளர் பேரவை, மறவர் நலச் சங்கம், அகமுடையார் நலச் சங்கம், தேவர் பேரவை நிர்வாகிகள் உறுப்பினர்கள் பொதுமக்க ள் திரளாக கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

நுகர்வோர் புகார்கள் மீது உடனடி நடவடிக்கை:

நியாயவிலைக் கடைகளில் தரமான பொருட்கள் தடையின்றி கிடைக்க வேண்டும்;

ஆட்சியர் வந்தனா கார்க் அறிவுறுத்தல்

திருவண்ணாமலை மாவட்டத்தில் நியாயவிலைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் உரிய அளவிலும் தரத்திலும் தடையின்றி வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு மற்றும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் காலாண்டு ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அறிவுறுத்தினார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், விசாரணை நடத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்து பொதுமக்கள், மாணவ, மாணவியர் மற்றும் கிராமப்புற மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

தன்னார்வ நுகர்வோர்



உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில், மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு மற்றும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுக்கான காலாண்டு ஆய்வுக் கூட்டம் 27.10.2026 அன்று மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பேசிய ஆட்சியர், பொதுமக்களின் நலனைப்பாதுகாக்கும் வகையில் நுகர்வோர் உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், தரமான பொருட்கள் மற்றும் சேவைகள் கிடைப்பதை உறுதி செய்தல், நுகர்வோர் குறைகளைத் தீர்த்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

நியாயவிலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் உரிய அளவிலும் தரத்திலும் வழங்கப்படுகிறதா என்பதை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். கடைகளின் செயல்பாடுகள் தொடர்பாகப் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் மீது உரிய அமைப்புகளின் பிரதிநிதிகள் நுகர்வோர் உரிமைகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் கொண்டு சேர்ப்பதுடன், பொதுமக்களின் கோரிக்கைகள் மற்றும் புகார்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கைகள் மற்றும் ஆலோசனைகளைப் பரிசீலித்து, அவற்றின் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு ஆட்சியர் அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதி வாளர் பார்த்திபன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சுஜாதா, மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு மற்றும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் உறுப்பினர்கள், பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்யாறு மார்கெட் பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணிகளை எம்எல்ஏ ஆய்வு

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் மார்கெட் பகுதிகளில் நடைபெற்ற வரும் மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணிகளை எம்எல்ஏ முக்கூர் என். சுப்பிரமணியன் நேற்று ஆய்வு செய்தார். திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு நகரில்



மார்க்கெட் பகுதியில் சந்தைமேடு, பைபாஸ் சாலை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மழைநீர் வடி கால்வாய்கள் தூர்ந்து மழைநீர் செல்ல முடியாமலும் அப்பகுதியில் கழிவுநீரும் சேர்ந்து அடைப்பு ஏற்பட்டது. இதை தொடர்ந்து செய்யாறு எம்எல்ஏ முக்கூர் என். சுப்பிரமணியன் பொதுமக்கள் கவனத்திற்கு கொண்டு வந்தனர். இதனை தொடர்ந்து நகராட்சி ஆணையர் சே.ஆண்ரூஸ், துப்புரவு ஆய்வாளர் கே.மதனராசன் ஆகியோருடன் சென்று ஜேசிபி இயந்திரம் மூலம் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இப்பணியை எம்எல்ஏ முக்கூர் என்.சுப்பிரமணியன் நேற்று பிற்பகல் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது மழைநீர் வடிகால் தூர் வாரும் பணியினை விரைந்து முடிக்கும்படி அறிவுறுத்தினார். ஆகியும் போது அதிமுக நிர்வாகிகள் நகர செயலாளர் கே.வெங்கடேசன், ஒன்றிய செயலாளர்கள் சி.துரை, எஸ்.திருமூலன், வி.ராமநாதன், அதிமுக நிர்வாகிகள் கோவிந்தராஜ், தசரதன், இளையராஜா, வெங்கடேசன், செந்தில், ரமணா, கலீல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருப்பாற்கடல் கிராமத்தில் பொது மக்கள் குப்பைகள் தரம் பிரித்து வழங்குவது குறித்து மாவட்ட ஆட்சியர் ஆய்வு

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்டது திருப்பாற்கடல் ஊராட்சி. இந்த ஊராட்சியில் இயற்கை மண்புழு தயாரிக்கும் கூட்டத்தையும் ஆய்வு மேற்கொண்டு, தூய்மை பணியாளர்களிடம்



ஊராட்சியில் மட்கும் குப்பை, மட்காத குப்பை, சுகாதார கழிவுகள், சிறப்பு கழிவுகள், உள்ளிட்ட நான்கு வகையான கழிவுகள் பொதுமக்கள் தூய்மை பணியாள ர்களிடம் வழங்குவது குறித்த ஆய்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் ப்ரியா ரவிச்சந்திரன் தலைமை தாங்கி பொது மக்களிடம் விழிப்பு ணர்வு ஏற்படுத்தினார். இதனனை தொடர்ந்து பொது மக்கள் தங்கள் இ ல் ல ங் க ளை த் தேடிவரும் தூய்மை பணியாளர்களிடம் குப்பைகள் தரம் பிரித்து வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். அப்போது மாணவர்கள் மத்தியில் குப்பைகள் தரம் பிரித்தல் குறித்தும் வி ழி ப் பு ண ர் வு ஏற்படுத்தி னார்.

இதனைத் தொடர்ந்து விளக்கங்கள் கேட்டறி ந்தார். பின்னர் தேவராஜ் அர சினர் மேல்நிலை ப்பள்ளி மாணாவர்கள் சார்பில் தூய்மை பாரத இயக்கம் சார்பில் நடைபெற்ற விழிப்பு ணர்வு பேரணியில் கலந்து கொண்டு, பேரணி யை துவக்கி வைத்தார். இந்த பேரணி பள்ளி வளாகத்தில் தொடங்கி முக்கிய வீதிகள் வழியாக வளம் வந்து இறுதியாக பள்ளி வ ள ா க த் தி லே யே மு டி வு ற் ற து . இ த ன ை ய டு த் து அப்பகுதியில் உள்ள ரேசன் கடையில் ஆய்வு மேற்கொ ண்டு, கடைகளில் உள்ள இருப்பு விவரங்கள் கேட்டறிந்தார். அப்போது அரசு அதிகாரிகள், பள்ளி ஆசிரியர்கள், தூய்மை பணியாளர்கள் உட்பட பலர் உடன் இருந்தனர்.

தமிழ் நாடு மின்சார வாரியம், பழநி கோட்டத்திற்குட்பட்ட 110/22 கிவோ பழநி துணை மின் நிலையத்தில் எதிர் வரும் 29.10.2026 – ம் தேதியன்று பராமரிப்பு பணி நடைபெற இருப்பதால் அன்று காலை 9.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை பழநி துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் பெறும் பகுதிகளான பழநி நகர், சிவகிரிபட்டி, பாலசமுத்திரம், ஆயக்குடி, கலிக்கநாயக்கன்பட்டி, புளியம்பட்டி, கோதைமங்கலம் தும்பலபட்டி, பாறைப்பட்டி, K.G. வலசு , நெய்க்காரபட்டி, சின்னகலையம்புத்தூர் ஆகிய பகுதிகளுக்கு மின் விநியோகம் நிறுத்தப்படும்

சின்னமனூரில் மாமன்னர் மருது சகோதரர்களுக்கு மாலை அணிவித்து மரியாதை



தேனி மாவட்டம், சின்னமனூர் நகர அகமுடையார் மக்கள் மன்றத்தில் அமைந்துள்ள மாமன்னர் பெரிய மருது, சின்ன மருது சகோதரர்களின் திருவுருவச் சிலைகளுக்கு, அவர்களின் வீரத்தையும் தியாகத்தையும் போற்றும் வகையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து நாட்டின் விடுதலைக்காக வீரத்துடன் போராடிய மருது சகோதரர்கள், வீரத்திற்கும் தியாகத்திற்கும் என்றும் அழியாத அடையாளமாகத் திகழ்கின்றனர். அவர்களின் தியாக வரலாற்றை நினைவு கூர்ந்து, வீர வணக்கம் செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது.

சின்னமனூர் நகர வீதி லீடர்ஸ் முதன்மை சேவகர் அண்ணாமலையின் ஆணைக்கிணங்க நடைபெற்ற இந்நிகழ்வில், சசிகோ, கணேசன், நவீன் சக்தி, பிரியா, பொன் ஆனந்த், ராமர், ஆதிகேசவன், சுந்தர தமிழ் பாண்டியன், பாண்டி, ராஜேந்திரன், மலை சந்திரபாண்டி, ஈஸ்வரன், ராஜ்குமார், சந்திரன், பால்பாண்டி, மாரிமுத்து, பாஸ்கரன் உள்ளிட்டோர் மற்றும் நகர தன்னார்வலர்கள், தலைவர்கள் கலந்து கொண்டு மருது சகோதரர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



இராணிப்பேட்டை மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து நடத்தும் மாபெரும் கல்விக் கடன் முகாமில்

50 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.2.45 கோடி மதிப்பீட்டில் கல்விக்கடனுதவி

மாவட்ட ஆட்சியர் க.ப்ரியா ரவிச்சந்திரன் வழங்கினார்கள்

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி க.ப்ரியா ரவிச்சந்திரன்.இ.ஆ.ப, அவர்கள் இராணிப்பேட்டை மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து நடத்தும் மாபெரும் கல்விக் கடன் முகாமில் 50 மாணவ மாணவியர்களுக்கு ரூ.2.45 கோடி மதிப்பீட்டில் கல்விக்கடனுதவி வழங்கினார்கள்.

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி நப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப. அவர்களிடம் இன்று (27.10.2026) ஆற்காடு ஊராட்சி ஒன்றியம். அரப்பாக்கம் அன்னை மீரா. தொழில்நுட்பவியல் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து நடத்தும் மாபெரும் கல்விக்கடன் முகாமில் 50 மாணவ மாணவியர்களுக்கு ரூ.245 கோடி மதிப்பீட்டில் கல்விக் கடனுதவி வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இன்று கல்விக் ன் முகாம் நடத்தப்படுகிறது. மாவட்ட நிர்வாகமும், அனைத்து வங்கிகளும் ஒருங்கிணைந்து கல்விக் ன் மேளாவைத் தமிழகமெங்கும் நடத்தி வருகின்றது. ஒட்டுமொத்த தமிழகத்திற்கும். இந்த ஆண்டிற்கு இலட்சம் மாணவர்களுக்கு ரூ.2223.48 கோடி கல்விக் வழங்க நமது அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. அதன்படி, நடப்பாண்டில் நமது இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு 1500 மாணவர்களுக்கு ரூ.40 கோடி கல்விக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாணாக்கர்களுக்கும் ஒருவித கனவுகள் இருக்கும். அந்த கனவுகளை அடைய பொருளாதார நிதி ஒரு தடையாக இருக்க கூடாது என்பதற்காக இந்த கல்விக் கடன் முகாம் நடத்தப்படுகிறது. மாணவர்கள் PM Vidya Lakshmi இணையதளம் வாயிலாகக் கல்விக் கடனுக்கு விண்ணப்பிக்க வேண்டும். ரூ.7.5 லட்சம் வரை கல்விக் கடன் பெறுவதற்கு பிணையம் (Collateral) தேவையில்லை. படிப்பை முடித்த பிறகு, கல்விக் ஆண்டுகளில் (180 மாதங்களில்) திருப்பிச் செலுத்த வேண்டும். தகுதியான விண்ணப்பங்களை வங்கிகள் விரைவாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மாணவர்கள் தங்களது கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தி, நல்ல கடன் வரலாற்றைப் (சிபில் ஸ்கோர்) பராமரிக்க வேண்டும். இது நீங்கள் எதிர்காலத்தில் ஒரு தொழில் முனைவோராக மாறும்போது உங்களுக்கு வங்கிக் கடனுதவிக்கு அணுகும்போது பயனுள்ளதாக இருக்கும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னோடி வங்கி மேலாளர் திருராஜன், கல்லூரி இயக்குநர் திரு. பிரசாந்த், செயலாளர் திரு. ராமராஸ், முதல்வர் திரு. கோபிநாதன், வட்டாட்சியர் திருபன்னீர் செல்வம், அனைத்து வங்கியாளர்கள் மற்றும் அலுவலர்கள், அனைத்து கல்லூரி மாணவ மாணவியர்கள். பெற்றோர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியை, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி சட்ட நடவடிக்கைகள் குறித்து 30 நிமிடங்கள் ஆலோசனை

தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் பெற்றுத் தருவதில் பண மோசடி செய்ததாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் கைதாகி நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷை எஸ்.சுதர்சனம், அன்பில் மகேஷிற்கு ஜாமீன் பெறுவது மற்றும் அடுத்தகட்ட சட்டரீதியான ஆலோசனைகளை மேற்கொண்டதாக கூறப்படுகிறது. சுமார் 30 நிமிடங்கள் அன்பில் மகேஷுடன் என்றும், பாரம்பரியமாக 3வது தலைமுறையாக திமுகவில் பயணிப்பவர் என்றும், காவல்துறை அழைத்த போதெல்லாம் விசாரணைக்கு ஒத்துழைப்பு நல்கியவர் என்றும், காவல்துறை எப்போது அழைத்தாலும் தாக்கியது திமுக கிடையாது எனவும், குடும்பப் பாசத்துடன் இருக்கின்ற இயக்கம் திமுக என நிதி அமைச்சர் மரியவில்சனுக்கு பதிலளித்தார்.

அன்பில் மகேஷ் கூடுதல் வசதிகள் எதுவும், கோர மாட்டார் எனவும், சிறைத்துறை அனுமதிக்கும் சலுகைகளை தவிர்த்து கூடுதல் வசதி கேட்க மாட்டார் எனவும், கைது நடவடிக்கையால் அன்பில் மகேஷ் உறுதியுடன் உள்ளார், இன்னமும் உறுதியுடன் இருப்பார் என கூறினார்.

திமுக தலைவர் ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் எங்களுக்கு துணை நிற்கும் வரை எங்களுக்கு அச்சம் இல்லை எனவும், மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எமை மாற்ற நினைத்திடும் சிறைச்சாலை என்ற பாரதிதாசன் வரிகளை மேற்கோள்காட்டி பதில் அளித்தார்.

முதலமைச்சர் கூறியது போல 3 கோப்புகளில் ஒரு கோப்பு திறக்கப்பட்டது தொடர்பான கேள்விக்கு பதில் அளிக்காமல் முன்னாள் அமைச்சர் சேகர்பாபு புறப்பட்டு சென்றார்.



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

உதயநிதி ஸ்டாலினுடன் சென்ற முன்னாள் அமைச்சர் சேகர்பாபு, சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் எம்எல்ஏவுமான மாதவரம் சந்தித்து பேசிய உதயநிதி ஸ்டாலின் பின்னர் பேட்டி ஏதும் அளிக்காமல் சிறையில் இருந்து புறப்பட்டு சென்றார். தொடர்ந்து சிறை வாயிலில் செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் அமைச்சர் சேகர்பாபு, அன்பில் மகேஷ் ஓடி ஒளியக்கூடியவர் அல்ல

திருவண்ணாமலையில் வணிகர்களின் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு காணப்படும்; கோயில் நிர்வாகம், காவல்துறையுடன் இணைந்து நடவடிக்கை

ஆட்சியர் வந்தனா கார்க் உறுதி

திருவண்ணாமலை மாநகரில் வணிகர்கள் எதிர்கொள்ளும் போக்குவரத்து நெரிசல், வாகன நிறுத்துமிட வசதி, சாலையோர ஆக்கிரமிப்புகள், குடிநீர், சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சம்பந்தப்பட்ட துறைகள் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அறிவுறுத்தினார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தலைமையில் செவ்வாய்க்கிழமை (அக். 27) வணிக நிறுவனங்கள், உணவகங்கள், வியாபாரிகள் சங்கங்கள் மற்றும் பல்வேறு வணிக அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



இக்கூட்டத்தில், திருவண்ணாமலை மாநகரில் செயல்பட்டு வரும் வணிக நிறுவனங்கள் மற்றும் உணவகங்களின் செயல்பாடுகள், உள்ளூர் பக்தர்கள் அருணாசலேசுவரர் திருக்கோயிலில் சிரமமின்றி தரிசனம் செய்வதற்கான ஏற்பாடுகள், வணிகப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல், வாகன நிறுத்துமிட வசதிகளை மேம்படுத்துதல், சாலையோர ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. மேலும், குடிநீர் வசதி, தெருவிளக்குகள் பராமரிப்பு, பொதுச் சுகாதாரம், சாலை மேம்பாடு, கழிவுநீர் வடிகால் வசதி, திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது. வணிகர் சங்கங்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, திருக்கோயில் நிர்வாகம் மற்றும் காவல்துறையினருடன் ஒருங்கிணைந்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். வணிகர்கள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டு, அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு உரிய தீர்வு காண வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு, திருவண்ணாமலை மாநகரில் சாலைகள் மற்றும் தெருக்களில் மழைநீர் தேங்குவதைத் தடுக்கும் வகையில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆட்சியர் தெரிவித்தார். மேலும், மழைநீர் தேங்கும் இடங்களைக் கண்டறிந்து, அப்பகுதிகளில் தேவையான முன்னெச்சரிக்கை மற்றும் சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், மாநகராட்சி ஆணையர் பாலசுப்பிரமணியன், துணைக் காவல் கண்காணிப்பாளர் கருணாகரன், மாவட்ட உணவுப் பாதுகாப்புத் துறை நியமன அலுவலர் பானு சுஜாதா, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சுஜாதா, வணிக நிறுவன உரிமையாளர்கள், உணவக உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகள், வியாபாரிகள் சங்க நிர்வாகிகள், பல்வேறு வணிக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ராணிப்பேட்டையில்

நவம்பர் 1-ல் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம்

தமிழக அரசின் அறிவுறுத்தலின்படி, 2026–ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சிகள் தினத்தை முன்னிட்டு, நவம்பர் 1–ஆம் தேதி காலை 11 மணிக்கு அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டங்கள் நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. இதுதொடர்பாக, அனைத்து கிராம ஊராட்சி தனி அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் பிரியா ரவிச்சந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

கூட்டத்தில் விவாதிக்கப்படும் முக்கிய அம்சங்கள்:

கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதிச் செலவினங்கள், கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை, மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துதல், டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், தமிழ்நாடு கிராம மேம்பாடு மற்றும் மறுமலர்ச்சி முன்னெடுப்பு (வெற்றி திட்டம்), குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் முறையைத் தடுத்தல், பல்லுயிர் மேலாண்மைக் குழுக்கள் அமைத்தல், இழிவான சாதிப் பெயர்களை மாற்றுதல், வளர்ப்பு விலங்குகளுக்கு ரேபிஸ் தடுப்பூசி செலுத்துதல், தெருநாய்களுக்குக் கருத்தடை மற்றும் ரேபிஸ் தடுப்பூசி செலுத்துதல், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தொடர்பான பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளன. மேலும், கிராம சபைக் கூட்டங்களில் வட்டாட்சியர்கள் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ளவும், கூட்டங்கள் முறையாக நடைபெறுவதைக் கண்காணிக்க ஒன்றிய அளவில் மண்டல அலுவலர்களை நியமிக்கவும் மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.



Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: G.RAJA